ஒப்புதல்களும் கிடைத்திருக்கின்றன. வருவாய் வாரியத்தினுடைய கருத்தை எதிர்பார்க்கிறோம். அதற்குப் பிறகு மாநில அரசே அதில் முடிவு செய்ய லாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்).

2. ஒழுங்குப் பிரச்சினை.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்.

**திரு. அ. ரகுமான்கான் :** பாய்ன்ட் ஆஃப் ஆர்டர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சேப்பாக்கம் தொகுதியில் நேற்று ஒரு சிறுமி கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருக்கிறாள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் தொகுதி என்று தனியாகப் பிரித்துப் பார்க்க வேண்டியதில்லை. இன்று காலையிலேயே திரு. பாபு ஜனார்த்தனன் உட்பட பல உறுப்பினர்கள் அதுபற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** இப்பொழுது நான் சொல்ல வந்ததைத் தயவு செய்து கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதுபற்றிய அறிவிப்பை கடைசியிலேதான் கொடுத்தீர்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வருவது, நான் பின்னால் கொடுத்தேன், முன்னால் கொடுக்க வில்லையென்பதல்ல. நானும் 8-30 மணிக்கே கொடுத்துவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கும் முன்னால் பலர் அதுபற்றி அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். முறைப்படி எடுத்துக்கொள்ளப்பெறும்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** நெய்வேலியில் 4 குழந்தைகள் பற்றி நான் கொடுத்த அறிவிப்பு யூகத்தின் பேரில் கொடுத்ததாகத் திருப்பி அனுப்பியிருக் கிறார்கள். இந்து பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதுகூட யூகத்தின்

1980 ஜூலை 23] [திரு. ப. பொன்னுரங்கம்]

அடிப்படையிலா? ஒரு செய்தியின் தொடர்பாக அது உண்மை என்ற அடிப் படையில் கேட்கிறோம். அட்ஜர்ன்மென்ட் மோஷனுக்குப் பதில் சொல்லும் போது அமைச்சர் சொல்லட்டும், அது யூகத்தின் பேரில் கொடுக்கப் பெற்றுள்ளது என்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த விஷயங்களை எல்லாம், என் அறையில் வந்து கேளுங்கள், பேசுவோம்.

**திரு. செ. இராமலிங்கம்:** திருவிடைமருதூரில் இன்று, 25—7—1980-லிருந்து அனைத்து ஆசிரியர்களும் மாஸ் காஷுவல் லீவ் போட்டிருக்கிறார்கள். இதுபற்றி, 19-ம் தேதியே அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொடுத்தது நிராகரிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

**திரு. செ. இராமலிங்கம்:** நிராகரிக்கப்படவுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துறையில் இருந்து பதில் வந்திருந்தால் தான் நான் எடுத்துக்கொள்ள முடியும். பதில் வராவிட்டால் நான் என்ன செய்ய முடியும்? பதில் வரும்வரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொறுமையோடு இருக்க வேண்டும்.

(முற்பகல் 9-40)

## 3. கவன ஈர்ப்புகள்.

### அ. விருதுநகர் வெள்ளைச்சாமி நாடார் பாலிடெக்னிக் மாணவர்கள் பிரச்னை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 54-ன் கீழ் திருவாளர்கள் குமரி அனந்தன், மு. அம்பிகாபதி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுள் ஒருவர் இதை கல்வித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. மு. அம்பிகாபதி.

**திரு. மு. அம்பிகாபதி:** தலைவர் அவர்களே, விருதுநகர் வெள்ளைச்சாமி நாடார் பாலிடெக்னிக் முதல்வர் 50 மாணவர்களுக்கு தீய நடத்தை சான்றிதழ் வழங்கியதால் அவர்களின் வருங்காலம் பாதிக்கப்பட்டிருப்பதுபற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.